Reg. No. M. 2997. தனிப்பிரதி 1 அணா

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE
Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOUAYER
MADAM NO. 4, Pondy.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து
வீதி நெ. 4, புதுவை.

VOL. I. புதுவை, ஸ்ரீமுக ௵ பங்குனி ௴ ௧௬ ௳ (29—3—34) No. 18.

ஔவை குறள்

அருள் பெறுதல்

அருளினா லன்றி யகத்தறி வில்லை
அருளின் மலமறுக்க லாம்.

இருளைக் கடிந்தின் றிறைவ னருளால்
தெருளுஞ் சிவசிந்தை யாம்.

வாய்மையாற் பொய்யா மனத்தினால் மாசற்ற
தூய்மையா மீச னருள்.

ஒவ்வகத்து னின்ற சிவனருள் பெற்றக்கால்
அவ்வகத்து ளானந்த மாம்.

உன்னுங் கரும முடிக்கலா மொள்ளிதாய்
மன்னு மருள்பெற்றக் கால்.

எல்லாப் பொருளு முடிக்கலா மீசன்றன்
தொல்லையருள் பெற்றக் கால்.

சிந்தையு னின்ற சிவனருள் பெற்றக்கால்
பந்தமாம் பாச மறும்.

மாசற்றகொள்கை மதிபோலத் தான்றோன்றும்
ஈசனருள் பெற்றக் கால்.

ஆவாவென்றோதி யருள்பெற்றார்க் கல்லாது
தாவாதே ஞான வொளி.

ஓவாச் சிவனருள் பெற்றா லுரையின்றித்
தாவாத வின்பந் தரும்.

உ
திருவருள் துணை.

ஞாலமுண்டாகவே காதல்
செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப்
பிரான்தன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு
கின்றான்வந்து முந்துமினே.

(திருவாசகம்.)

வித்தகம்

புதுவை.
ஸ்ரீமுக ௵ பங்குனி௴ 16௳

பொருள்

அறம் பொருள் இன்பம் என்பனவற்றுள் பொருளே சிறந்தது என்பர். பொருள் அல்லவரைப் பொருளாகப் போற்றச் செய்வது பொருளே.

குறள்

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

(ஷை76ம் அதி- பொருள் செயல்வகை. 1.)

(இ-ள்.) பொருள் அல்லவரை—உலகத்தவரால் ஒரு சிறிதும் மதிக்கப்படாது புறக்கணிக்கப்படும் நிற்றிலை உடையாரையும், பொருளாகச் செய்யும்—உரியாரும் பெரியாரும் இவரே என்று பொன்போலப் போற்றிக் கொள்ளும்படி செய்யும், பொருள் அல்லது பொருள் இல்லை—பொன்னாகிய செல்வமேயன்றி வேறு சிறந்த பொருள் யாதும் இல்லை என்பது.

பொருள் நடுவணது. அதனை அடைதலாற்றான் அறனும் இன்பமும் உளவாகும். "நடுவணது எய்த இருதலையும் எய்தும்" என்றனர் ஆன்றோர். பின்வரும் தேவர் வாக்கும் இவ் வுண்மையை நன்கு புலப்படுத்தும்:

அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

(ஷை-பொருள் செயல்வகை. 4.)

(இ-ள்.) திறன் அறிந்து தீதின்றி வந்த பொருள்—ஈட்டும் முறையை அறிந்து அறிந்தவாறே, தீவினை நிறை குறுகிற்குமாறு, பணிசெய்து ஈட்டுதலால் அடையப் பெற்ற வாய்மையான பொருளானது, அறன் ஈனும் இன்பமும் ஈனும்—அறத்தையும் இன்பத்தையும் ஒருங்கே அளிக்கும் என்பது.

ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு.

(ஷை-பொருள் செயல்வகை 10.)

(இ-ள்.)—ஒண் பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு—முயன்று வினைவேற்றி முதிர்ந்து அநுபவத்துக்கு வந்த வாய்மையான பொருளை அடைந்தவர்க்கு, ஏனை இரண்டும் ஒருங்கு எண்பொருள்—மற்றைய அறமும் இன்பமும் அதன் விளைவாகவின் ஒருங்கே எளிதில் அடையும் பொருள்களாகும் என்பது.

ஆதலால் பொருள் இன்றியமையாதது. அதனை அடைதல் அவசியம். மறம் பொருள் துன்பம் என்பன உலகியல். இவ் உலகியலுக்கும் நடுவணையாகியபொருளே இன்றியமையாதது.

குறள்

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா கியாங்கு.

(ஷை-அருளுடைமை – 7)

(இ-ள்.)–பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி ஆங்கு—அநித்தியமாகிய பொருள் இல்லாது வறியராயினார்க்குக் கற்பனையாகிய இம் மாயாப் பிரபஞ்ச வாழ்வு நடத்தல் இல்லையாயினால்போல, அருள் இல்லார்க் கவ்வுலகம் இல்லை—அருட்செல்வமாகிய வாய்மையான பொருள் இல்லாத உலக மாக்களுக்கு மெய்யடியார்க்குரிய பொன்னுலக வாழ்வு இல்லையாகும் என்பது.

உலகியலாகிய மறம் பொருள் துன்பம் என்பனவற்றை அறம் பொருள் இன்பம் எனக் காணல் வேண்டும். இதனாற்றான் பொன்னுலக வாழ்வு உளதாகும்—நித்தியத்துவம் உளதாகும்—வீடு பேறு உளதாகும். இதற்கும் நடுவணையாகிய பொருள் இன்றியமையாதது. மறம் பொருள் துன்பம் என்பனவற்றில் அநித்தியம் நிலவுகின்றது. பயனும் அநித்தியமே. அதுதான் மரணம் பிறப்பு என்னும் இவை இரண்டின் மயக்காகும். அவாவே காரணமாக முனைப்போடு கூடிய செயல்களால்—போலிக் கல்வியால்—பொய்ம்மையால் உலகமாக்களை ஏமாத்தி ஈட்டும் போலிப் பொருள் மறத்தாறு ஈட்டிய பொருளே—அநித்தியப் பொருளே. மனதுக்கும் அதன் வாயிலாகச் சரீரத்துக்கும் துன்பம் உண்டாகுமாறு—அவச்சலனம் உளதாகுமாறு ஈட்டும் பொருண்முயற்சி மறத்தாறேயாகும். பயனும் அஃதே. அறம் பொருள் இன்பம் என்பனவற்றில் நித்தியம் நிலவுகின்றது. பயனும் நித்தியமே. அதுதான் இல்லறம்—வீடு பேற்றின்பம்—இல் அருந் துறவறம்—வீடு பேறு. அறத்தாறு ஈட்டிய வாய்மையாவ பொருளே செல்வத்துட் செல்வம்—அருட் செல்வம். அஃதுடையார் எல்லாமுடையார்.

குறள்

அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

(ஷை-அருளுடைமை. 1.)

என்பது பொய்யாமொழி.

(இ-ள்)—பொருட் செல்வம் பூரியார் கண்ணு முள—அநித்தியமாகிய மாயாகாரியப் பொருளான் வரும்மணி பொன் நெல் முதலியன மறச் செயலுடையார் மாட்டும் உள்ளன, ஆதலால் அருட் செல்வம் செல்வத்துள் செல்வம்—அருளான் வரும் செல்வமாகிய நித்தியப் பொருளே நினைத்தவாறு செல்வங்கள் யாவற்றையும்தரத் தக்கதாய் விளங்கும் வாய்மையான செல்வமாகும் என்பது.

பூரியார்கண்ணுள்ள பொருட்செல்வம் அன்னவர் அவாவை அகற்றாது அவர்க்கும் பிறர்க்கும் தீமையே விளைத்தலால் அது வாய்மையான செல்வமாகா தென்பதும், மெய்யடியாரால் திருவருட் சகாயத்தால் அடையப்படும் செல்வம் அவர் அவா அனைத்தையும் பூர்த்தி செய்து அவர்க்கும் பிறர்க்கும் நன்மையே விளைத்தலால் அதுவே வாய்மையான செல்வம் என்பதும் கூறப்பட்டன.

ஆதலால் உலகியலுக்கு ஒப்ப அநித்தியமான பொருளைத் தேடி அடைவதை ஒழிந்து, எத்துணைக் கஷ்டம் வரினும் அவற்றைப் பொருட்படுத்தாது மதி வைராக்கியத்தோடு இருந்து மனதுக்கும் சரீரத்துக்கும் அவச்சலனமின்றி வாளா பணி செய்து கிடந்து திருவருட் சகாயத்தால் வாய்மையான பொருளைத் தேடி யடைவதே சாலச் சிறந்ததும் இன்றியமையாததுமாம். வாய்மையான பொருளே அறத்தாறு ஈட்டிய பொருளாம். மறமும் அநித்தியமான பொருளும் ஒன்றிய விடத்து உளதாகும் சிற்றின்பம் துன்பமே. இவற்றால் மரணம் ஏற்படுகின்றது—சூனியம் நிலவுகின்றது—அநித்தியம் உளதாகின்றது. அறமும் அறத்தாறு ஈட்டிய வாய்மையான பொருளும் ஒன்றிய விடத்துப் பேரின்பமாகிய வீடு பேற்றின்பம் உளதாகின்றது. இம்மூன்றும் கெட்ட விடத்து — திரிந்த விடத்து — வீடுபேறு உளதாகின்றது — நித்தியத்துவம் நிலவுகின்றது.

நாமெல்லாம் துன்பம் உழத்தற்கு மூல காரணம் என்னை? எனின், பொருளின்மையே என்பதில் ஐயமில்லை. உலகை ஆளும் சக்கரவர்த்திக்கும் இச்சஞ்சலமே உண்டு என்பதிலும் ஐயமுண்டோ? அது வேறு இது வேறு என்பர் சிலர். இஃது அறியாமையால் எழுந்த கூற்றே. உலகம் அஃதாவது மனித சமூகம் பேதித்து நிற்பதன் காரணம் பொருளின்மையே. இது பொது. சிறப்பாக—தனித் தனியாகப் பார்க்குமிடத்தும் பொருளைப் பற்றிய குறைபாடு இல்லாதான்—அவா இல்லாதான் ஒருவனுமே இல்லைஎன்பது வெள்ளிடை மலையாம். "ஆரா நல்குரவு அவா வேனப்படுமே" என ஆன்றோரும் கூறினர். இப்பொருளால் ஆம் பயன் என்னை? எனின், முன்னிலை தன்னிலையாதற்கு—உறவு படுதற்கு இப்பொருளே உற்ற கருவி என்பதில் ஐயமில்லை. இருளகற்றும் பொய்யா விளக்கம் பொருளே. இருளகன்றால் முன்னிலை உணரப்படும்—தன்னிலையாகும்.

குறள்

பொருளென்னும் பொய்யா விளக்க மிருள [றுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று.

(டை—பொருள் செயல்வகை 3.)

என்றனர் நமது பொய்யில் புலவர்.

(இ-ள்.) பொருள் என்னும் பொய்யா விளக்கம் — பொருள் என்று சிறப்பித்துக் கூறப்படுகின்ற வாய்மையான ஒளியானது, எண்ணிய தேயத்துச் சென்று இருள் அறுக்கும்—நினைத்த இடமெல்லாம் சென்று மயக்கத்தை நீக்கி உண்மையைக் காட்டும் என்பது.

இதனால் வாய்மையான பொருளும் அதன் இயல்பும் நன்கு விளக்கப்பட்டன. ஞான நேத்திரம் பெற்ற மெய்யடியாரே இத்தகைய பொருளானராகிய அருளாளர் அருட் செல்வர் என அறிக.

இத்தகைய அருமை பெருமை வாய்ந்த பொருளைப் பெறுதற்கே மெய்யடியார் அனைவரும் அரும்பாடு பட்டனர்; ஆற்றொணாத் துன்பங்களால் அலைப்புண்டனர்; நாயினும் கீழ்நிலை யுடையார் இவர் என உலக மாக்களால் இகழ்ந்து புறக்கணிக்கப்பட்டனர்; இவற்றால் சிறிதும் தளர்வடையாது அரிய பெரிய வைராக்கியத்தோடு அஞ்சா நெஞ்சத்தினராய் அவரோகணம் பெறாது ஆரோகணம் பெற்று பவரோகம் எனும் தீவினை நிறையைக் குறக்கி நல்வினை நிறைக்கு ஒப்பக் கண்டனர்; இருவினைச்சமரசம் பெற்றனர்; மல பரிபாகம் உற்றனர்; உற்ற இடத்தே தமது இச்சைகள் அனைத்தும் முற்றப் பெறக்கண்டனர்; நிறையையும் கண்டனர்; நிறை மீறிய அவா வெனும் தற்சுதந்தரத்தை விண்டனர்; இப் பொருளையும் கண்டனர்; அடைந்தனர்; இச்சைகளை நிறையுட் புகுத்தி ஏறும் வழியைக் கண்டு ஏறிவிட்டனர்; அவிச்சை அகன்றனர்; வாய்மையான அறத்தையும் வீடு பேற்றின்பம் என்னும் தூய காமத்தையும் அடையப் பெற்றனர்; இல் அறுத் துறவறத்தில் நின்றனர்; வீடும் கைகூடப் பெற்றனர். இவரே தமதுஉடலும்உயிரும் ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் அடைந்த மெய்யடியார் என அறிக.

எத்தனையோ கோடி சென்மங்களில் ஈட்டிய நற்றவப் பயனாகிய பூர்வ புண்ணியப் பயனால் கைகூடும் சிவப்பணியாற்றான்—குருநெறியாகிய அறத்தாற்றினாற்றான் வாய்மையான பொருளை அடைதல் வேண்டும். பூர்வ புண்ணியமின்றி, கஷ்டமின்றி பொருள் கிடைப்பதென்பது முடியாத காரியம். பூர்வத்தையும் உத்தரத்தையும் சமப்படுத்திய ஞான்று கிடைக்கும் பொருளே வாய்மையான பொருளாகும்—வாய்மை இன்னது எனக் காட்டும் பொருளாகும்—முத்திவாயில் இது எனக் காட்டும் பொருளாகும். இப்பொருள் தான் பொருளாகிய தனம் தான் கண்ணுக்கு எட்டாததாய்த்

தமக்கு அப்பால் எங்கேயோ வெகு தூரத்தில்—ஆகாசத்தில் இருப்பது எனவும், சில நடை கொடி பாவனைகளால் இறந்தபின் இதனை எளிதில் அடைந்துவிடலாம் எனவும் பலர் நிச்சயமாக நம்பி இதனை அடையும் நெறியை நாடாது மாண்டு போகின்றனர். “உற்ற ஆக்கையின் உறுபொருள்” ஆகிய இச் செம்பொருளை இவ் ஆக்கை பிணி மூப்புக்களால் பழுதடைந்து பிணமாகிக் கழிந்தபின் அதனைப் பிரிந்து அடைவது என்றால் அது முயற்கொம்பே என்பது சொல்லாமலே அமையும். கடவுளை அடைதற்கும் அஃதாவது கடவுள் அருளைப் பெறுதற்கும் பொன்னாகிய பொருளுக்கும் உள்ள சம்பந்தம் என்னை? என்பர் அறிவிலார் பலர். அம்மையப்பருக்குப் பிரியத்தை விளைக்கக் கூடியது — உரிமையானது பொன்னேயன்றி வேறன்று. ஆதலாற்றான்,

திருவாசகம்

“பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்.”

(ஷை திருப்பொற்சுண்ணம். 2.)

என, உலகம் உண்மையை அறிந்து உய்யும் பொருட்டுக் கருணை மிகுதியால் ஓலமிட்டான் கண்ணாளன் மாணிக்கம். அகில சத்திகள் அனைவரும் அமல சொரூபங்களாதலால் சுண்ணம் இடிப்பதற்குத் தகுதியுடையவர்கள் அவர்களே என்று அவர்களையே,

“......மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமின்......”

(ஷை—ஷை—2.)

என்று கூவி அழைக்கின்றான். இப் பொற் சுண்ணத்தை இடிப்பதனால் ஆம் பயன் என்னை? எனின், கடவுளை அடைதற்கு—கடவுள் அருளைப்பெறுதற்கு இதுவே வழியாகும் என்பது. வேறு தடத்தால் கடவுளை அடைய முடியாதோ? எனின், முடியாது! முடியாது! முடியாது! என்றே முத்தாரமும் கரந்தூக்கி மொழியப்படும். மாணிக்கம் யாது கூறுகின்றான்?

“.........எங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாள”

வேண்டுமாயின் “செம் பொன்செய் சுண்ண மிடித்துநாமே” எனக் கூறுகின்றான். அன்றாயின் அம்மையப்பர் எம்மை ஆள்வதென்பது—எமக்குக் கருணையை வழங்குவதென்பது வாய்ப்பேச்சேயாகும். செம்பொன் செய் சுண்ண மிடித்துச் செம்பொன் ஆக்கினாலன்றி அப்பன் திருவடியை அடைதல் என்பது பித்தலாட்டக் கதையே! இப் பெற்றியை அடையாத ஒருவன் தன்னை “வேதாந்தி” என்றோ “சித்தாந்தி” என்றோ கூறிக்கொண்டால் அவன் பெற்றிதான் என்னை? அவனை நினைப்பதாலும் பேசுவதாலும் பயன் என்னை? திருப் பொற் சுண்ணப் பதிகத்தின் தெய்விக உண்மையை—அருமை பெருமையைத் தற்காலத்தவரிற் பலர் அறியாது அதனை அலட்சியம் செய்கின்றனர் என்பது மிகையன்று.

இத்தகைய பொன்னை — வாய்மையான பொருளை—இப் படியை—இத் தத்துவத்தை அடைந்தாற்றான், ஆசையை—அவாவை அளவுட்படுத்தல் முடியும். இப் படியை அடைந்தவனே விக்கினங்கள் அனைத்தையும் அழகு (வி) படுத்தும் நாயகனாவன். விநாயகப் பேறு—விக்கின விநாயகப் பேறு இதுவே. மூலபண்டாரம் இதுவே. அம்மையப்பர் மூலபண்டாரத்தைத் தமது அடியவர் எனப்படுவோர்க்கே வழங்குவர் — வாய்மையான அடியார்க்கே வழங்குவர். எம்பெருமானுக்குப் பிள்ளையான இடம் இதுவே. எம்பெருமான் இடபாரூடராய்க் காட்சி கொடுக்கும் படி இதுவே. சர்வபோகப்பேறு இதுவே. முதற்படி இதுவே. அமலப்படி இதுவே. மிகக் கடினமானதும் அடைதற் கரியதும் இதுவே. சாதனாச் சாதல் அடைந்த பின் கிடைக்கற்பாலதாகிய படி இதுவே. படி என்னும் தத்துவம் இதுவே. தற்சுதந்திரம் ஒழிந்த விடத்துக் காணப்படும் படி இதுவே. தன்னைத் தான் அறிதல் என்பதும் இதுவே. பூசுரத்துவம் இதுவே. அகில கயவர்கள் அனைவரையும் அடக்கி ஆளும்படி இதுவே. முன்னிலையாவும் தன்னிலையாகும் படி இதுவே. முத்தி வாயில் இதுவே. புகலிடம் இதுவே. எம்பெருமான் பூரண கருணையை வழங்கும் இடம் இதுவே. இதனை அடைந்தவரே வழியடியார். முன்னிலைகளையெல்லாம் நிறை கண்டு பஞ்சீகரணித்துப் படியேற்றம்பெற்று உய்தியடைய வல்லார் இவரே யாவர். மெய்த்தொண்டராகிய இவர் பெருமை சொல்லவும் பெரிதே! மெய்யடியாராகிய இவர் பெருமை அளக்கவும் பெரிதே! இவர் அருமை பெருமை நம்மனோர் சிந்தனை சொற் செயல்களுக்கு அளவுபடுவனவாகுமா? ஆகா! ஆகா!

சாந்தோக்கிய உபநிடதம் கூறிய “பூமா” என்னும் பொருளும் இதுவேயாம். “எத்தத்துவத்தே இருக்கும் அறிஞன் தன்னினும் வேறாக எப்பொருளையும் விழிகளால் காணானோ, செவிகளால் கேளானோ, மனத்தால் அறியானோ, அதுவே “பூமா” சப்தப் பொருளும் சுக சப்தப் பொருளுமாம். “ஆன்மாவினும் இரண்டாவது வஸ்துவால் பயமுண்டாம்” என்னும் சுருதி உளது. கூறிய சுகவடிவப் “பூமா” வோ மரணாதி சர்வ விகாரங்களும் அற்றதாம். ஆதலின் அஃது அமிர்தரூபமாம். “பூமா” வினும் வேறாய அல்ப பதார்த்தங்கள் யாவும் மரணாதி சர்வ விகாரங்களையும் உடையனவாம். ஆதலின் அவை மர்த்திய ரூபங்களாம். இத்தகைய சுக ரூபப் “பூமா” வை அதிகாரி குரு உபதேசத்தானே அறிந்த போதே முக்கிய அதிவாதி ஆவான். அதனினும் வேறாய பிராணாதிகளின் ஞானத்தே முக்கிய அதிவாதியாகானாதலின், அஃதாம் பொருட்டுச் சுகரூபப் “பூமா” வை அவசியம் அறிதல் வேண்டும்.” என்பது சாந்தோக்கிய உபநிடத

தாற்பரிய வருணனம். "பூமா" என்பதே பூமி. மேலே கூறிய படியை அடைந்தவன் பூமியைக் கண்டவன் ஆகின்றான். பூமியைக் கண்டாலன்றோ இடம் நிலை பெற்றது! அதன் முன் உண்டோ அப்பெற்றி? இல்லை. இல்லை. இடம் நிலைத்தாற்றான் அறம் வளர்த்தல் முடியும். அதனால் இன்பமும் அடையப்படும். இப் படி என்னும் தத்துவத்தை அடைந்தவன் பூதபஞ்சீகரணத்தை அறிந்தவன் ஆகின்றான். அதனால் அவன் தநுக்களை மாற்றும் ஆற்றல் உடையவன் ஆகின்றான். கற்பு+உரம் என்னும் கற்பூரம் செய்யத்தகுந்தவன் இவனே. அஃதாவது தனது தூலத்தைக் கற்பூர வண்ணமாக—அமலமாக விளக்கத் தகுந்தவன் இவனே என்பது. கற்பு என்னும் ஊரை (கற்பு+ஊர்+அம்) அழகு செய்பவன் இவனே எனினும் ஆம். தநுக்களை — பஞ்ச தநுக்களாலாய சரீரத்தைக் கற்பூர வண்ணமாக மாற்றும் ஆற்றல் உடையான் இவனே என்க. இவன் தூலமே அருட்சோதி வடிவாய் அருவமாதற்குரியது—மறைதற் குரியது என்க. பின்வரும் பிரமாணங்களும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்துகின்றன.

திருமந்திரம்

அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணில்
எழுகின்ற தீயிற் கற்பூரத்தை யொக்கப்
பொழிகின்ற இவ்வுடல்போமப்பரத்தே.

(டை8–ம் தந். விசுவக்கிராசம் 1)

முத்துத்தாண்டவர்

"...................................... ....
கற்பூரதீபம்போல் என்தன் உடலைக்
கனக சபையில் கலந்து கொள்வாயே."

தாயுமானவர்

சித்த திருவிகற்பஞ் சேர்ந்தார் உடல் தீபம்
வைத்த கற்பூரம் போல் வயங்கும் பரா
[பரமே.

சுக்கில சுரோணிதத்தாலாய பிண்டத்துக்குக் "கலிலம்" என்னும் பெயர் உண்டு. கல்+இலம்=கலிலம். கல் என்பது சுக்கில சுரோணிதம். இதனை அழகு படுத்துவதே கல்+வி என்னும் வித்தை—வி=அழகு. வாய்மையான கல்வி இதுவே. இப் படியை அடைந்தவனே "கல்விமான்" எனப் படத் தக்கவன். அவ்வாறு "கல்விமான்" ஆனதன் பயன் என்னை கொல்லோ? என்பர் அறியா மாக்கள். அவன்தான் "மா" வுக்குரிய பிள்ளை யாவன்—மாப்பிள்ளை யாவன் அவன் என்க. "மா" எனப்பூத்த மங்கையை-தாயை அணைந்து சுகிக்கும் பிள்ளை யாவன் அவன் என்க. பெற்றவளையே கூடினன் என்னும் தத்துவார்த்தம் இது. தான்பெற்ற பிள்ளையைத்தழுவி அணைந்து சுகித்தாள் என்பதும் இது. பெற்ற தாயைக் கூடி அணைந்து சுகித்தான் என்பதும் இது. இதுதான் பெரிய பேறு. இதனைப் பெறுவது தான் அரிதினும் அரிது மிகஅரிது. இதனைத் தான் சித்தர் கணம் பலபரிபாஷைகளால் கூறியது. "இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் தமையன்" (திருப்பொற் சுண்ணம். 13.) என்னும் மறை மொழியும் மேலே கூறிய உண்மையைப் புலப்படுத்துதல் கண்டு கொள்க. பெற்ற தாயைக் கூடித் தாதையைக் கொன்றவனை மதுரைச் சோமசுந்தரப் பெருமான் ஆட்கொண்டனன் என்னும் புராணக் கற்பனையின் உண்மையும் ஈண்டு நோக்கப்படுக. தாதையைக் கொல்வது-தாதை தானற வீகவது என்பதன் உண்மையைப் பின்வரும் திருமூலர் திருமந்திரம் நன்கு புலப்படுத்தும்.

திருமந்திரம்

ஒன்றண்டு தாமரை பொன்மலர் மூன்
[றன
தன்றாதை தாளு மிரண்டுள காயத்தன்
நன்றாகச் சாய்ச்சிப் பதஞ்செய்ய வல்லார்
[சட்
டென்றேசென் றீசனை யெய்தலு மாமே.

(டை8-ம்தந்.அடிதலையறியும்திறங்கூறல்8.)

இத்தன்மை தைவரப் பெறுதற்குத் தான் வாய்மையானபொருளை அடைதல் வேண்டும்—பொன்னை அடைதல் வேண்டும்— பொற்சுண்ணம் இடிக்க வேண்டும் என்றது. பொற்சுண்ணம் இடித்தாலன்றி "தேவியும் தானும் வந்து"—எம்பெருமான் தம்பதியாய் வந்து எம்மை யாள்வதென்பது வெறும் பேச்சே—பாட்டிக் கதையே—பிறரை ஏமாத்தி வயிறு வளர்த்தற்குரிய—புகழைப் பூசலைப் பெறுதற்குரிய இழிவான தந்திரமே என்க. சுண்ணம் இடித்தாலன்றி கல் பு பூக்காது—கற்பு என்பது கிடையாது. அமல ஒளி—அருளொளி—அருட் செல்வம் ஆக்கம் பெறாது. பூத்த கல்லை அம் படுத்துவது—அழகு படுத்துவது கல்பு+அம்=கல்பம். கல் அழகு பெறப் பூத்து கற்பு எனப் பெயர் பெற்று அம்—பெற வேண்டும்—அழகு பெற வேண்டும்—ஒளி பெற வேண்டும். பின் வரும் திருமூலர் திருவாக்கும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்தும்.

திருமந்திரம்

தானே யளித்திடும் தையலை நோக்கினுல்
தானே யளித்திட்டு மேலுற வைத்திடும்
தானே யளித்த மகாரத்தை யோதிடத்
தானே யளித்ததோர் கல்லொளி யாமே.

கல்லொளி யேயென நின்ற வடதிசை
கல்லொளி யேயென நின்றன னிந்திரன்
கல்லொளி யேயென நின்ற சிகாரத்தைக்
கல்லொளி யேயெனக் காட்டினுன் றனே.

(டை 4-ம். தந். திருவம்பலச் சக்கரம்
24, 25.)

"கல்லொளியேஎன நின்றசிகாரத்தை" எனக்கூறப்பட்டமையால் "கல்" என்பதன் பொருள் நன்கு புலப்படுகின்றது. இச் சிகாரமே நடு நாயகம்—நடு நாயகப்படி. இப் படியை அடையவே "கல்" ஒளி பெறும்—அழகு பெறும். கல் அழகு பெற வேண்டியது என்பதன் பொருள் என்னை? கல் வி பெற வேண்டும் என்பதேயாம். வி—அழகு. பஞ்ச பௌதிக தநுவே "கல்" எனப்பட்டதென்பது. வாய்மையான கல்வி இன்னதென்பது பின் வரும் திருவாக்காலும் நன்கு புலப்படும்:

திருமந்திரம்.

குறிப்பறிந் தேனுட லுயிரது கூடிச்
செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை
மறிப்பறி யாதவந் துள்ளம் புகுந்தான்
கறிப்பறி யாமிகுங் கல்விகற் றேனே.

(ஷை. 1-ம் தந். கல்வி. 1.)

இக் கல்வியைப் பெறுதற்கு— கல் என்னும் சுக்கில சுரோணிதத்தாலாய இச் சரீரத்தை, வி—அழகு பெறச் செய்வதற்கு உரிய தந்திரம் என்னை? கல் என்னும் நமது சரீரத்தை அக்கினியில் அவியாகக்கொடுக்க வேண்டும். அதுதான் (கல்+அவி) கலவி என்பது. அத்தகைய அக்கினி எங்குளதோ எனின், தன்னிலையிலும் முன்னிலையிலும் உண்டு என்ப. "உபஸ்த துவார வடிவ கோளகத்தை அடைந்து விரியத்தோடு கூடிய உபஸ்த இந்திரியம் வெளிப்பட்டது" எனவும் அதுவே "பஞ்சம ஆகுதியின் சாதனமாம்" எனவும் ஐதரேயம் முறையிடுகின்றது. இதனைப் பிழையின்றி வாய்மையாக உணராவிடின், காமவெறி கொண்டு நிறை முறையின்றி ஒழுகி மகா பாதகராய்ச் சாதலடைவோர் உலகோர். வேத உண்மைகளை உணரும் ஆற்றலும் காதலும் இல்லாதார் பலர் அவ்வாக்கியங்களுக்கு விபரீதப் பொருள் கண்டு வரம்பின்றி ஒழுகுதலும் அவற்றை இகழ்ந்து தூற்றுதலும் தற்கால உலகியலாகின்றன. ஐதரேயம் முறையிடுகின்ற இவ்வுண்மையை உணர்வது மிகக் கடினம். பாழ் கடத்தல்—பாழைக் கடத்தல் என்பதன் பொருளும் இதுவே. ஆலகாலம் எனும் நஞ்சை உண்பது என்பதும் இதுவே. நெருப்பாறு மயிர்ப்பாலம் என்பனவும் இதுவே. இந்நிலை கைவருதற் கேற்ற வாய்மையான தீக்கையே ஆகமங்களில் "ம்ருத தீக்ஷை" எனக் கூறப்பட்டது. அகத்த தநக்கன் ம்ருதம் அடைந்து—செத்து ஈறி செம்பொன் தேகமாக மாறி உலவாக்கிழியெனப் பொருள் வழங்கும் இடம் இதுவே.

தற்கால உலகம் இவ் உண்மைகளை அறியாது மாழ்கின்றது, பின் மாள்கின்றது என்பது வெள்ளிடை. மண் பொன் பெண் இம் மூன்றினாற்றான் ஒருவன் கரையேற முடியும். உலகம் இம்மூன்றையும் வெறுத்துப் புறக்கணிக்க வேண்டும் எனவும் அதுதான் வாய்மையான துறவு எனவும் கூறி முரண்பட்டுச் சாதலடைகின்றது. இம் மூன்றையும் புறக்கணித்தவர் வாய்மையான பொருளை அடைய மாட்டார் — வாய்மையான மண் பொன் பெண்ணை அடையமாட்டார்; அதனால் அறனும் இன்பமும் அடையமாட்டார்; வீடும் அடைய மாட்டார்; மறுமும் துன்பமும் மரணமுமே—பிறவிநெறியே அடைய வல்லவர். ஆதலால் வாய்மையான பொருளை அடைந்து இருதலையு மெய்தி சித்தியத்துவம் பெறுதலே உய்யும் நெறியாம் என்க.

இதுகாறும் கூறியவைகளால் வாய்மையான பொருளின் பெற்றி ஒருவாறு சிறிது விளக்கப்பட்டது.

(சுபம்.)

ஆரியமும் தமிழும்

(17-ம் வாரத்தொடர்ச்சி)

அந்தத்தை அணவுவார் அந்தணர். அந்தம் வேத அந்தமாகிய நாத அந்தம். பார்ப்பார் என்பதன் பொருளும் இதுவே. "ஆறறியந்தணர்க்கு அருமறை பல பகர்ந்து" என்னும் கலித்தொகைக் கடவுள்வாழ்த்துச்சொற்றொடரில் "அந்தணர்" என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையையும் நோக்குக. அந்தணர் என்னும் திருநாமம் உலகச் சாதியாருள்ளே ஒரு சாரார்க்குக் காரண விடுகுறிப் பெயராக வழங்குகின்றது என்பர் வித்துவப் பெரியார் சிலர்; காரண விடுகுறிப் பெயரின் இலக்கணத்தையும், உண்மையான வேதங்களைத் தம்முன்னே கண்டு ஓதி உணர்ந்து அவ்வேத அந்தமாகிய நாத அந்தத்தை அணவுதலாகிய காரணம் புலையும் கொலையும் களவும் தவிரும் பொய்யில் ஒழுக்க நெறியறியாத உலகச்சாதி மாந்தரிடம் முற்றாக இல்லை என்பதனையும் இவ் வித்துவப் பெரியார் அறியாதவர் என்று அடியேன் கருதத் துணியவில்லை. அவர் இவ்வழக்குப் போலி இடுகுறி என உணர்ந்தும், அபிமானம்பற்றி உலகசம்பிரதாயமாகக் காரண விடுகுறி என்கின்றாராதலால், அவர்க்கும் இவ்வாறு கூறுதல் உண்மையிற் கருத்தன்று போலும் என்றே கொள்ளுதல் வேண்டும். உண்மை அந்தணரும் இடுகுறி அந்தணரும் உண்மை நிலையும் உலகியலும் நோக்கி வேறுவேறாகக் கூறப்பட்டமையும் ஆன்றோர் நூல்களில் காணப்படும். உண்மை அந்தணரே எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக வல்ல உண்மைத் துறவிகளுமாவர். உண்மைச்சாதகயோகங்களால் மாயையின் முதற்படியை மிதித்து—ஏறி, நினைத்த போகங்களை யெல்லாம் நிறைகண்டு, கொண்டு அநுபவித்து அதற்கு மேற்படியில் ஏறினவரே உண்மைத் துறவிகளாவர். மாயையின் முதற்படியில் ஏறினவரே இந்திரபோகமுடைய உண்மை இந்திரராவர். இதுபற்றியே இந்திரன் வழியடியான் எனப்பட்டனன்.

திருவாசகம்

கானார் புலித்தோ லுடைதலையூண் காடு [பதி
ஆனா லவனுக்கிங் காட்படுவா ரார்ஏடீ
ஆனாலுங் கேளா யயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ.

(ஷை. திருச்சாழல் 12)

பௌராணிக இந்திரன் பூலோகப் போலி இந்திரனாவன். அமலம் பெறுதற்கேற்ற முதற்படியை மிதித்தவரே நினைத்த போகங்களை நினைத்தவாறு ஆக்கும் ஆற்றல் உடையவர். "தோலுடைய செவியன்" ஆகிய எம்பெருமான் விடையேறிக் காட்சி கொடுக்கும் படி இதுவே. பக்குவ சிவன் எம்பெருமானுக்குப்பிள்ளையான இடம் இதுவே. அளவிறந்த கஷ்டங்களை அடைந்து மதிவைராக்கியம் பூண்டு இப்படியை அடைந்த தன் பிள்ளைக்குச் சகல போகங்களையும் கொடுப்பன் எம்பெருமான். தக்க வயதுவந்த பிள்ளையானதால் சாவியை, சாவி யெனும் (துறவு கோல்) திறவுகோலைப் பிள்ளை கையிற் கொடுப்பான். இப் படி காசு கொடுக்கும். படிக்காசு என்பது இதுவே. பிள்ளை கையில் துறவு கோலைக் கொடுத்து "நீ அறிவாளியாயினமையால் இவ்வுலகத்தினும் எவ்வுலகத்தினும் கோலோச்சக்கடவாய்" என்பான் அப்பன். இத்திறவுகோல்

தான் முக்கோணம்—முச்சுழி—ஆயுதம் (ஃ) என்பது. இப் படியிலும் உட்படிகள் உண்டு. என்பர். ஆதலால் பக்குவபேதம் உண்டு இவ்வாறு வேண்டியவற்றை எல்லாம் நிறைகண்டு அநுபவித்து அவாவினை விண்டு மேற்படியில் ஏறினவரே உபரதி பெற்றவர். எவ்விதமான சுகத்தையும் போகத்தையும் பூரணமாக அடையும் வல்லபம் இல்லாதவன் "உலகத்தை வெறுத்தேன்; துறந்தேன்" எனக் கூறினால், அக்கூற்று வாய்மையாகுமா? யாவற்றையும் கண்டன்றோ—அநுபவித்தன்றோ—யாவும் தன்னிடத்து இருக்கப்பெற்றன்றோ ஒருவன் அவற்றைத் துறக்கவேண்டும்! ஆதலால் மாயையின் முதற்படியை மிதித்துச் சகல போகங்களையும் கண்டு கடந்து படியேற்றம் பெற்று நாதபீடத்தை அணவிய உண்மை அந்தணரே சிவகாருண்ணியமுடைய உண்மைத் துறவிகளாதல் கண்டு கொள்க. இதன் திறமெல்லாம் மேலும் விரிப்பிற் பெருகும்.

பிரமவித்தையை உணர்ந்தோர் பிராமணர். பிரமவித்தைஅரியதும்பெரியதுமாம். உலக நிலைக்கு உலக நூற் கல்வியாகிய வித்தை அவரவர் பக்குவத்துக்கு ஏற்றவாறு விரும்பப்படுதல் இன்றியமையாதது போலவே, உண்மை நிலையை விரும்பிய பக்குவர்களுக்கு இன்றியமையாதது பிரமவித்தை என்க. வீடுபெற நிற்போனால் விரும்பப்படுவேதும், அவனுக்கு இன்றியமையாததும் உண்மை வித்தையாகிய பிரமவித்தையே என்க. தூலம் அமலமடைந்து சூக்குமமாதல் எவ்வாறு? இதனை யார் அறிவார்? யாருக்குச் சொல்லுவார்? எம்பெருமானே இதனைப் பக்குவசீவருக்கு அவரவர் சடபேதம் கர்ம பேதங்களுக்கு ஏற்ற ஏற்றவாறு உணர்த்தியருளுவான். இதுதான் அரிய பெரிய பிரம வித்தை.

மற்றைய வித்தைகளைக் கஷ்டப்பட்டு கற்றுக்கொள்ளலாம். "ஸயன்ஸு"கள் மூலமாக விளக்கலாம். பிரம வித்தையைக் கற்றுக் கொள்ளுதல் முடியாது, முடியாது! இது உலகில் நூல்களாக வழங்கும் வேதாகம புராண இதிகாச உபநிஷத்து முதலியவைகளுக்கு எட்டாதது. காயம் நிரிதற்கேற்ற அஃதாவது மாறிப்பிறத்தற்கேற்ற அரிய பெரிய தந்திரமாகிய காயத்திரியும் இதுவே. இதனை உணர்ந்தோர் எம்பிரானாவர். முதன்மையையுடைய இவ் அரிய பெரிய பிரம வித்தை எம்பெருமானால் தமக்கு உணர்த்தியருளப்பட்ட உண்மையையே "ஆதிப்பிரமம் வெளிப்படுத்த அருளறி வாரெம்பிரானாவாரே."(திருவாசகம் திருவார்த்தை 1) என்னும் திருவாக்கால் வெளிப்படுத்தியருளினார் இவ்வித்தையை உணர்ந்து ஒழுகித் தமது தூலம் பூரண அமலமடைந்து 'தான்அவன் ஆகும் சமாதி' கைகூடி மாறிப்பிறந்து "ஊனமில் காயம்" என்னும் ஓ வடிவம் பெற்று அதனோடு உலகு கண்டுபோற்ற மறைந்து உண்மைச்சைவ முத்தியடைந்த உண்மைப் பிராமணராகிய மணிவாசகப் பிரபு.

மணிவாசகர் தமது தூலம் அமலமடைந்து சூக்குமமாதற் பொருட்டு அநுட்டித்த விதிகள் ஞானசம்பந்தருக்குப் பொருந்தா. ஞானசம்பந்தர் அநுட்டித்த விதிகள் சுந்தரமூர்த்திக்குப் பொருந்தா. சுந்தரமூர்த்தி அநுட்டித்த விதிகள் அப்பருக்குப் பொருந்தா. அப்பர் அநுட்டித்த விதிகள் சாக்கிய நாயனாருக்குப் பொருந்தா. இவ்வாறே ஏனைய அடியார்க்கும் கொள்க. வீடுபெற நிற்கும் பக்குவ சீவரது சடபேதம் கர்மபேதத்துக்கு ஏற்ற ஏற்றவாறு எம்பெருமானால் அருளப்படும் சாதகயோக விதிகளே அவரவர்க்கு வேத விதியும் ஆகம விதியுமாக அமையும். ஒருவர்க்குரிய விதிகள் மற்றொருவர்க்குப் பொருந்தா. "நாம் அவனைப் பூசைசெய்த மார்க்கந்தன்னை, நாட்டிலே சொல்ல என்றால் நகைப்பார் காணே" என்றார் கருவூர்ச் சித்தரும். இவ்விதிகள் அளவுபடாதனவாதலின் உலகில் நூல்களாக வழங்குதல் முடியாதகாரியமே! இதுபற்றியே "பத்தியாலடையும் அங்க லிங்கலிக்கம் பகர்ந்திடும் உபநிடம் இன்றாம்" எனச் சுத்தசாதகமும் (செ 4.) கூறியது என அறிய வேண்டும். ஆதலால் சமயகுரவர் முதலிய தத்துவப் பெரியார் உலகில் வழங்கும் நூல்களையே ஓதி அவற்றிற் சொல்லியவாறே ஒழுகி உண்மைச் சைவ முத்தியடைந்தனர் என்பதும், அநுபவப்பயனாக எழுந்த தமது அருள் வாக்குகளில் அந்நூல்களையே பாராட்டினர் என்பதும், அவற்றின் சாரத்தையே திருவாசக முதலியனவாக அருளிச் செய்தனர் என்பதும், அந்நூல்களையே ஓதி அவற்றின் வழி ஒழுகினோரும் ஒழுகுவோரும் தூலம் பிணமாகவிழச் செத்துப்போன பின்பு பாசங்கள் பற்றுக்களெல்லாம் அற்று முத்தியடைந்தார் அடைவார் என்பதும் கற்பனைகளை உண்மையென்று நம்பியமையால் சேர்ந்த அபிமானக் கூற்றுக்களேயாகும். உண்மைச் சாதகங்களின் அருமை அறியாதார் மெய்யடியார் உலக நூல்களிற் கூறிய வேள்விகளையே உண்மை மகங்கள் எனப் பாராட்டினார் எனவும் கூறுவர். மெய்யடியார் அகத்தும் புறத்தும் விளங்கும் உண்மை மகங்களின் அருமை பெருமைகளை அறிந்தோர் சித்தர்களேயாவர். இவற்றை உலகமாக்கள் அறியவல்லாரல்லர், "மகந்தான் செய்து வழிவந்தார் வாழ வாழ்ந்தாய்" (திருவாசகம்கோயின்மூத்ததிருப்பதிகம்9) என மணிவாசகர் அருளியதும் அறிக. உண்மை மகங்களின் அருமை பெருமைகள் ஈண்டு விரிப்பிற் பெருகும். கற்பனைகளைக் கற்பனை என்றுணராது உண்மை என நம்பியோர் அபிமானக்கூற்றுக்களே, உண்மையை உள்ளவாறே அநுபவமாக உணர்ந்து கூறிய சமயகுரவர் முதலிய தத்துவப் பெரியாரை உலகமாக்கள் இகழ்வதற்குப் பெரும்பாலும் காரணமாயின. மெய்யடியார் உண்மை ஒழுக்கங்களையும் அவர் அநுபவப் பாடல்களின் உண்மைப் பொருளையும் கற்பனையாளர் உணர்ந்து கொள்வது முடியாதகாரியமே.

எல்லாம் வல்ல சித்தனும் கபில முக்குரவனுமாகிய எம்பெருமான் திருவருளைப்பெற்று உண்மைச் சாதக யோகங்களைத் திருவருட் கவசம் பூண்டு வழுவறத் தாங்கி ஒழுகும் மெய்யடியார் நிலையாகிய தமிழ் நிலையும், வேதாந்தமாகிய நாதாந்தத்தை அணவி அந்நாதாந்த சோதிப் பிழம்பாகிய ஆரியனைத் தன்னுள்ளே கண்டு ஆரியனான ஆரிய நிலையும் எம்பெருமான் வடிவமாகக் கொள்ளப்படுதலினாலும் அப்பெருமானும் தமிழன், தென்னவன், சைவன், வேதியன், அந்தணன், ஆரியன் முதலிய திருநாமங்களால் போற்றப்பட்டனன்.

இதுகாறும் கூறியவைகளால் "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என மறைக்காட்டுறையும் மணாளனையே அப்பர் போற்றியதன் உண்மையும், ஆரியம் தமிழ் என்னும் வியாப்பிய வியாபகங்களின் உண்மையும், அவ்விரண்டுமானவன் எம்பெருமான் என்பதும், பிறவும் ஒருவாறு உணரப்படும்.

ஆரியம் தமிழ் என்னும் வியாப்பிய வியாபகங்களின் உண்மைகளை ஒருவாறு விளக்குமுகத்தால், உண்மைக்கும் கற்பனைக்கும் உள்ள இடையீடு ஒரு சிறிது காட்டப்பட்டதேயன்றிக் கற்பனைகளை

இகழ்ந்து விடுவது இக்கட்டுரையின் நோக்கமன்றென்பதனை அறிஞர் உணர்ந்து கொள்வார் என்பது திண்ணம். கற்பனையின்றிக் காரியம் இல்லை. சீவாது பக்குவங்களுக்கு ஏற்றவாறே கற்பனைகள் அமைந்துள்ளன. கற்பனைகளாகிய இடு குறிகளே இயற்கையாகிய உண்மை இன்னது என அறிதற்கு இலக்காயிருத்தலால் அக்கற்பனைகளை நமக்கு உறவுபடுத்தி உண்மையை நாடுவதேயன்றி, அவற்றை இகழ்ந்து விடுவது முறையாகாது. கற்பனைகளாகிய முன்னிலைகளை நிறைகண்டு பஞ்சீகரணித்து உண்மை நிலையை அடையவேண்டும் என்பர் பெரியார்.

உண்மை காணப்பட்ட விடத்துக் கற்பனை போலியாய் ஒழியும், கற்பனையாகிய இடுகுறிகள் உண்டாயினமைக்குக்காரணம் உண்டா? காலம் குறிப்பிடமுடியுமா? எனின், இவையாவும் உலகியல் என்றும், அநாதி என்றுமே உத்தரம் கூறல் வேண்டும். மாயாகாரியமாகிய குழறுபடைகளும் மரபுகளும் எல்லாம் கற்பனையாகிய இடுகுறியே. நால்வகை மரபுகளும் உண்மை நிலையிலும் உலகியலாகிய போலி நிலையிலும் உள்ளனவே. உண்மை நிலையில் இந்நால்வகையினையும் ஒருவனே அடைய வேண்டும். திருமூலர் கூறிய உழவுயாது? அப்பர் செய்த உழவாரப்பணி யாது? இவற்றின் உண்மைகளை அறிதல் வேண்டும்.

உலகியலாகிய இடுகுறி மரபுகளை ஒழிக்க முயல்வது அறிவுடைமையாகாது. "யோகாத்ருடி பலீயஸீ = காரணத்திலும் இடுகுறி வன்மையுடையது" என்பது இலக்கண நியமனம். ஆதலால் ஒழிப்பதும் முடியாத காரியமே. கற்பனைகளால் உண்மையை நாடி உணர்ந்து ஒப்புரவொழுகி உண்மை நிலையை அடைய முயலுதலே அறிஞர் கடனாகும்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு
மப்பொருண், மெய்ப்பொருள் காண்ப
[தறிவு."

அறிவிப்பு

கடிதர்களின்
அபிப்பிராயங்களுக்கு
அவர்களே பொறுப்பாளிகள்.

OPINION FROM
YOUNG MEN'S HINDU ASSOCIATION.

Negombo
CEYLON.

பத்திராதிபர் அவர்களுக்கு,
"வித்தகம்."

6வ மார்ச்மீ 1934.

அன்பார்ந்த ஐயா,

தாங்கள் சங்கத்திற்கு அனுப்பிய பத்திரிகைகள் பெற்றுக்கொண்டோம். வித்தகத்தில் வெளிவரும் கட்டுரைகள் சைவசமய ஆராய்ச்சிக்கும் தமிழ்ப் பாஷை முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதனவாக இருக்கின்றன.

பல அரிய விஷயங்களைக் கற்றோரும் மற்றோரும் எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடிய விதமாகவும் பல பாடல்களை ஆதாரமாகக் கொண்டும் எழுதப்பட்டிருக்கின்றது. இப்பத்திரிகையால் தமிழ் மக்கள் நன்மை அடைவார்கள் என்பதற்கு ஆட்சேபனை இல்லை.

வித்தகம் யாவராலும் ஆதரிக்கப் பட்டு மென்மேலும் அபிவிருத்தி அடைந்துவரும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
வ. நடராசா
கௌரவ காரியதரிசி.

"வித்தகம்"
வருட சந்தா விவரம்
முன் பணம்

இந்தியா, பர்மா, சிலோன்	ரூ. 3-0-0
மலாயா, சிங்கப்பூர் சைகோன்	ரூ. 4-0-0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.
(F. India.)

"வித்தக" மதிப்புரை.

இலங்கையில் உள்ள பிரசித்திபெற்ற
முருகவேள் திருத்தளிகளுள் ஒன்றாகிய
யாழ்ப்பாணம் கந்தவனக்கடவைக்
கோவில் அருச்சகரும்,
வேத சிவாகமங்களில் வல்லவரும்,
கந்தவனநாதர் கலிவெண்பா முதலிய
பிரபந்தங்கள் இயற்றிய
தமிழ்ப் புலவரும்,
நவிண்டில் வாசருமாகிய,
ப்ரம்மஸ்ரீ
சு. கனகசபாபதிக்குருக்கள்
அவர்கள் வழங்கியது

புதுவையிலிருந்து வெளிப்படும் "வித்தகம்" எனப் பெயரிய பத்திரிகையில் காணப்படும் விஷயங்கள் நம் சைவ சமயிகள் ஆவசியகம் உணரவேண்டிய அரிய விஷயங்கள் என்பதூஉம், தற்காலம் இத்தகைய விஷயங்களை விளக்கும் பத்திரிகை அரிது என்பதூஉம், இப்பத்திரிகையை வாசிக்கும் விவேகிகட்கு நன்று புலனாகும். ஆதலின் இப்பத்திரிகையை யாவரும் கிரமமாக வாங்கி வாசித்து நன்மை அடைவாராக.

வெண்பா.

உண்மைநூ லோதுமுயர் பொருளை
[யோர்ந்திடவே
ஒண்மையுட னேவிளக்குமோப்பரிய-
[திண்மைபெறும்
"வித்தக" மாம் பத்திரிகை மேதினி
[யின் மேனிலவ
அத்தனருள் செய்க வமர்ந்து.

குறிப்பு.—இம் மதிப்புரையையும் வாழ்த்துப்பாவையும் மனமுவந்து வழங்கிய அந்தணகுல திலகராகிய ப்ரம்ஸ்ரீ குருக்கள் அவர்களுக்குளமதி மனமார்ந்த வணக்கம் உரியதாகுக.

[ப—ர்.]